MADURAI SEED

மதுரை சீடு இளைஞர்கள் வழங்கும்


# புதிய வெளிச்சங்கள்


தனிச்சுற்று இதழ்


"வெளிச்சத்தின் வேராய் விளங்குவோம்
புது உலகின் மாதிரியாய் திகழ்வோம்"


டிசம்பர் 08 – மார்ச் 09 | உலகு – 1. | வெளிச்சம் – 3


## அச்சமின்றி உறுதியோடு நில்லுங்கள்

நடக்கும் என்று நம்பினால் நடக்கும் முடியும் என்று முயன்றால், நிச்சயம் முடியும். முயற்சிகள் இல்லாமல் செயல்களும் இல்லை. பயன்களும் இல்லை "நீங்கள் நேரே லட்சியத்தை நோக்கிச் செல்வது என்று தீர்மானித்தால், அதனால் என்ன நஷ்டமானாலும் என்ன கஷ்டம் வந்தாலும் எத்தனை கசப்பான விஷயங்களைச் சந்திக்க வேண்டி யிருந்தாலும் நேரே செல்ல உறுதி கொண்டால், எவ்வளவோ தொல்லைகள் குறையும் அச்சமின்றி உறுதியோடு நில்லுங்கள். தடைகளெல்லாம் மறைந்து விடும்.

– ஸ்ரீ அரவிந்த அன்னை.

*அன்பு நெஞ்சங்களே!*

மதுரை சீடு அறக்கட்டளை இளைஞர்களின் வணங்கங்களும், வாழ்த்துக்களும். புதிய வெளிச்சங்களின் மூன்றாவது இதழ் தங்கள் கரங்களில் தவழ்வதில் பெருமை அடைகின்றோம். இவ்விதழில் தன்னம்பிக்கை ஊட்டும் விஷயங்களை கருப்பொருளாக்கி சில படைப்புகளை அளித்திருக்கின்றோம். படித்து மகிழ்வீர்!

தோழமையுடன்
**P. பெரிய சாமி BE**
ஆசிரியர் குழு

- குழந்தைகள் வைரங்கள்
  அவர்களை திட்டாதீர்கள்
  தீட்டுங்கள்

  **M. மாரிமுத்து BA**

*பூக்காத மொட்டுக்களாய்*
*தவழாத தண்ணீரில் விழுந்தோம்*
*விழுகின்ற போதும்*
*பூக்கின்ற பூக்கள் நாம்*

**O. மோகன் B.A**

## வாக்களிப்பது நமது கடமை

எப்போதும் முன்னேறிச் செல்வதுதான் வெற்றிக்கு வழி என்று நினைக்காதீர். செஸ் ஆட்டத்தில் சில தருணங்களில் பின்னால் நகர்வதுவே வெற்றிக்கு வழி வகுக்கும்.

**S. முருகபாண்டி BA**

உங்களை யாராவது நியாயமாக பாராட்டினால் அதை அனுபவியுங்கள். புகழ்ந்தால் வெளியே பெரிய ரியாக்ஷன் காட்டா விட்டாலும் அதை உள்வாங்கிக் கொள்ளுங்கள். அதுதான் உண்மையாக தங்கள் மன உணர்வை வெளிப்படுத்தும் அவர்களுக்கு நாம் செய்கிற மரியாதை.

**G. விஜி B.E**

## சீட்டு விளையாட்டு

சீட்டுகளில் டைமண்ட், ஆட்டின், இஸ்பேட், கிளாவர் என நான்கு வகைகள் இருக்கிறது. சூதாடுபவன் டைமண்ட் எனப்படும் தனது பணத்தை வைத்து சூதாடுகிறான். ஆட்டத்தில் தோற்றுப் போகிறான். அவனுடைய ஆட்டின் (இதயம்) அடைத்துக் கொள்கிறது. அதனால் அவன் இறந்து விட்டால் அவன் உடல் மீது இஸ்டேட் (கல்லறை) கட்டப்பட்டு மேலே ஒரு கிளாவர் (மலர்) வைக்கப்படுகிறது.

**C. அருண்குமார் B.Sc**

" உங்கள் மனம் ஒரு தொட்டி, அதை குப்புறக்கவிழ்த்து வையுங்கள். இல்லை என்றால் குப்பையை வைத்துக் கொண்டு வருபவர்கள் அதில் கொட்டி விட்டுப் போவார்கள் உங்கள் மனத்தொட்டியில் மேலும் மேலும் குப்பை கொட்டுபவர் உங்கள் நண்பராக இருக்க முடியாது"

**காப்மேயர்**

மனிதரில் மூன்று ரகம், நீங்கள் எப்படி?

1. எவரும் செய்வதையே தானும் செய்வது
2. எவரும் செய்யாததை தான் செய்வது
3. எவரும் செய்ய முடியாததை தான் செய்வது

" இணைவீர் மதுரை சீடு இளைஞர் பேரவையில்...
படித்து மகிழ்வீர் புதிய வெளிச்சங்கள் இதழை"

# வாருங்கள் பழகுவோம்!

ஜோசு என்ற புத்த ஞானி, மடத்தின் வரவேற்பறைக்குள் நுழைந்தார். தான் சந்தித்த முதல் துறவியைப் பார்த்து, " உங்களை இதற்கு முன் சந்தித்திருக்கிறேனா ? " என்று கேட்டார். துறவி, " இல்லை" என்று பதிலிறுக்கவே, "அப்படியானால் என்னுடன் தேநீர் அருந்துங்கள், வாருங்கள்! என்றார் ஞானி.

அடுத்து, உள்ளே நுழைந்த மற்றொரு துறவியைக் கண்ட ஜோசு, "உங்களை இதற்கு முன் சந்தித்திருக்கிறேனா ?" என்ற அதே கேள்வியை எழுப்பினார். "ஆம் சுவாமி! நான் உங்களை முன்பே சந்திருக்கிருக்கிறேன் !" என்றார் துறவி. "அப்படியானால் மிகவும் மகிழ்ச்சி! வாருங்கள், என்னுடன் தேநீர் அருந்துங்கள்! என்றார் ஞானி.

இந்த இரண்டு சம்பவங்களையும் கவனித்துக்கொண்டிந்த புத்த மடத்து நிர்வாகியான துறவி, ஞானி ஜோசுவைப் பார்த்து, "சுவாமி! இரண்டு துறவிகளின் இரண்டு விதமான பதில்களுக்கும் நீங்கள் ஒரே விதமாகப் பதில் கூறி, அவர்களைத் தேநீர் அருந்த அழைத்தீர்கள்! உங்கள் செயல் எனக்குப் புரியவில்லையே!" என்று தயங்கியபடி கேட்டார்.

"நீங்கள் இன்னும் இங்கேயேதான் இருக்கிறீர்களா ?" "ஆம் சுவாமி!"

"அப்படியானால் வாருங்கள். என்னுடன் கொஞ்சம் தேநீர் அருந்துங்கள்!" என்று புன்னகைத்தார் ஞானி.

இப்படி ஒரு கதை 'ஜென்' கதை உண்டு.

அன்புள்ள வாசகர்களே! நீங்கள் இன்னமும் இங்குதான் இருக்கிறீர்களா ? அப்படியானால் வாருங்கள், கொஞ்சம் தேநீர் அருந்துங்கள், பேசுவோம்!

ஒரு மனிதன் தன்னைத்தானே எப்படி மதிக்கிறான் (உள்ளுறவு) பிறருடன் எப்படிப் பழகுகிறான் (உலக உறவு) என்பதை வைத்துத்தான் அவனை ஊரும் உலகமும் எடை போடுகிறது!

அமெரிக்காவில் நீங்கள் ஒரு வேலைக்கு விண்ணப்பித்தீர்களானால், இந்தியா போல யாரும் அங்கு பாட சம்பந்தமான கேள்விகளைக் கேட்டு உங்கள் அறிவை மீண்டும் சோதிப்பதில்லை. நிறுவனத்திலுள்ள முக்கியமானவர்களை பேட்டி காணச்செய்கிறார்கள். அதன் மூலம், பிறருடன் அவரால் எளிதாகப் பழக முடியுமா, அங்கிருக்கும் எல்லோருடனும் அவரால் ஒத்துப்போக முடியுமா என்று பார்க்கிறார்கள்.

என்னைப் பாராட்டும் ஒருவனை உலகின் இரண்டாவது பெரிய மனிதனாக நான் நினைக்கிறேன். என்றொரு வாசகம் உண்டு. இனிமையாகப் பழகும் ஒருவனிடம் எல்லோரும் இனிமையாகப் பழகத் துவங்குகிறார்கள். ஹாஸ்யமாகப் பேசும் ஒருவனுடன் இருப்பதை எல்லோரும் விரும்பி வரவேற்கிறார்கள். பிறருக்கு உதவும் ஒரு மனிதனுக்கு உலகமே உதவ முன் வருகிறது.

அறிவு, திறமை, கற்பனை, துணிச்சல், முடிவெடுக்கும், திறன், வியூகம் என்ற இவற்றுடன் வாழ்வின் வெற்றிக்குத் தேவையான மிக முக்கிய குணம் பழகும் தன்மை தான்.

அதிகாரத்தின் முன்னிலையிலோ, செல்வாக்கின் முன்னிலையிலோ, பணத்தின் பின்பலத்திலோ, ஒரு தலைவனின் செல்வாக்கு நிழலிலோ நீங்கள் ஒரு பதவியைப் பெறக்கூடும். ஆனால் பிறருடன் உங்களால் அனுசரித்துப்போகப் முடியவில்லை என்றால் சுமுகமாகப் பழக முடியவில்லை என்றால், உங்கள் பதவி நிலைக்காது. அரசியல் உலகில் இத்தைய ஆர்ப்பாட்டக்காரர்களின் பதவி ஆட்டம் காண்பதையும், பிறகு அவர்கள் பிறர் காலில் விழுவதையும் அன்றாடக் காட்சியாகக் காண்கிறோம்!

பிறருடன் பழகுதல் என்பது ஒரு கலை. வாருங்கள், பழகுவோம்!

நன்றி : **எம்.எஸ். உதயமூர்த்தி**

தொகுப்பு **P. சரண்யா B.Sc**

**M. அமுதா B.A**

# வாங்க! கோடையை சமாளிப்போம்.

- * தினமும் காலையும் மாலையும் கண்டிப்பாக குளிக்க வேண்டும். அதிகம் வெயிலில் சுற்றக்கூடாது.
- * இளநீர், பழச்சாறுகள் அதிகம் உட்கொள்ள வேண்டும். பழச்சாறுகளை கடைகளில் பருகும் போது முடிந்தவரை ஐஸ் கட்டிகளைப் போடாமல் பருகுவது நல்லது.
- * உணவில் காரம், புளிப்பு அதிகம் சேர்க்கக் கூடாது. எண்ணெய்ப் பதார்த்தங்களை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.
- * இரு சக்கர வாகனங்களில் அதிகம் செல்வோர் அதிகளவு தண்ணீர் பருக வேண்டும்.
- * தேங்காய் எண்ணெய்யையும் உடலில் தடவிக் கொள்ளலாம். இதனால் உடலிற்கு குளிர்ச்சி கிடைக்கிறது.
- * எப்போதும் உடலைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்.
- * உடலையும், சுற்றுப்புறத்தையும் குளிர்ச்சியாக வைத்துக் கொண்டால் கோடையையும் குளுமையாகச் சாமாளிக்கலாம்.
- * குறைந்த விலையில் சீசனில் கிடைக்கும் பன்னீர், திராட்சை, தர்பூசணி, தக்காளி, ஆரஞ்சு போன்ற பழங்களைப் பழமாகவோ, சாறாகவோ சாப்பிடுதல் நலம்.



- * இளநீர் இது இயற்கை நமக்களித்துள்ள அற்புதமான பானம். இப்படி இயற்கை ஊட்டச்சத்துக்களும், கெடுதல் விளைவிக்காத மருத்துவப் பயன்கள் உள்ளவைகளையும் அருந்துவதை விட்டுவிட்டு கடைகளில் விற்கும் கலர் கலரான பானங்களை சாப்பிடாதீர்கள். இயற்கையோடு இணைந்து இன்பமாக வாழுங்கள்.
- * தேங்காய்ப்பாலை வாரம் இருமுறையாவது உணவில் சேர்க்கவும்.
- * கூடியவரை வெளியில் செல்லும் வேலைகளை காலை அல்லது மாலையில் வைத்துக் கொள்ளலாம். வெயிலில் செல்ல வேண்டியிருந்தால், கட்டாயம் குடையும தண்ணீர் பாட்டிலும் எடுத்துச் செல்லுங்கள்.
- * தலைக்குத் தொப்பி அணிவது மிகவும நல்லது.



- * வெயிலில் சென்று வந்தவுடன் குளிர்ந்த நீரில் முகம் கழுவுவது அவசியம்.
- * கோடைக் காலத்தில் பெரியவர்கள் 3 லிட்டருக்கு அதிகமாகவும் குழந்தைகள் 2 லிட்டருக்கு அதிகமாகவும் தண்ணீர்ப் பருகுவது மிகவும் அவசியம்.

**M. மருதுபாண்டி B.E**



தொடர்புக்கு. **Madurai Seed Youth Fedaration (MSYF) MADURAI SEED TRUST**
**Arjun Shanmuga Illam, 439 / 1 East Street,**
**Karumbalai, Madurai - 625 020. Ph: 0452 - 2537670 - 98948 05446**
**E-Mail: mdu.seed1999@yahoo.com; Web: madurai-seed.org**